*KALAM - International Research Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*13(2), 2020*

# அட்டாளைச்சேனைப் பிரதேச மக்களின் வாழ்வாதார நிலை: ஆலங்குளம் கிராமத்தை மையப்படுத்திய கள ஆய்வு

**ஏ.எச். றிபாஸ்**
**விரிவுரையாளர்**
**இஸ்லாமிய கற்கைகள் துறை**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.**

Correspondence: ahrifas@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

பல்வேறு படிமுறைகளைக் கொண்ட மனித வாழ்வில் மனிதர்களது வாழ்வியல் முறைகளும் பலவகைப்பட்டதாக காணப்படுகின்றமையினால் வாழ்வாதாரம் அனைத்துப் பிரதேசங்களிலும் வாழ்கின்ற மக்களின் அனைத்துத் துறைகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற முக்கிய அம்சமாகக் காணப்படுகின்றது. ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட ஆலங்குளம் கிராமத்தில் காணப்படுகின்ற மக்களின் அன்றாடத் தொழில் முயற்சிகளையும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை, சவால்களை கண்டறிதல் போன்ற நோக்கங்களைக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பண்பு ரீதியானதாகக் காணப்படும் இவ்வாய்வுக்காக 75 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு நேர்காணல் மற்றும் வினாக்கொத்துக்கள் மூலமாக பெறப்பட்ட முதலாம் நிலைத் தரவுகள் Microsoft Excel மென்பொருளைப் பயன்படுத்தி விபரணப் பகுப்பாய்வு (Descriptive analysis) மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இறுதியில், ஆய்வுப் பிரதேசத்தில் அனேகமான மக்கள் கூலிவேலை, சுயதொழில்வாய்ப்புக்களில் ஈடுபடக்கூடியவர்களாகக் காணப்படுகின்றமையால் பெறப்படுகின்ற வருமானமும் அந்த மக்களின் அன்றாடத் தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியாதளவுக்கு மிகவும் குறைவானதாகக் காணப்படுகின்றது. திருப்தியற்ற தொழில், இருப்பிடம், குடிநீர் வசதிகள், போக்குவரத்து வசதிகள் மற்றும் சேமிப்பின்மை போன்ற சவால்களை எதிர்கொள்ளவேண்டிய சூழல் காணப்படுவதால் தங்களின் வாழ்க்கை ஓட்டத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். மேலும், இதனை எதிர்கொள்வதற்கான ஆலோசனைகளையும் இவ்வாய்வு முன்வைக்கின்றது.

**பிரதான சொற்கள்:** ஆலங்குளம், வாழ்வாதாரம், வருமானம், அடிப்படைத் தேவைகள், பிரச்சினைகள்

## 1. அறிமுகம்

ஒரு சமுகத்தின் நிலவுகைக்கான அனைத்துத் துறைகளிற்குள்ளும் பொருளியல் துறையானது பிரதானமான இடத்தினை வகிப்பதனால் பொருளியல் இன்றி அந்த சமூகமானது நகர்வடைவது சாத்தியமற்றதாகும். மக்கள் குழு ஒவ்வொன்றும் தமது நாளாந்த வாழ்வில் மூன்று பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது அவசியமாகும். எந்த பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்ய வேண்டும்? யாருக்காக உற்பத்தி செய்ய வேண்டும்? எப்படி உற்பத்தி செய்ய வேண்டும்? என்பது தொடர்பான பிரச்சினைகளாகும் (ஹக், 2009). அந்தவகையில், பொருளாதாரமானது சமுக அறிவியலான பொருளியல் என்பது மனித விருப்பங்களைப் பற்றியும், அவை நிறைவுசெய்யப்படுவது பற்றியும் ஆராய்கின்றது. பல்வேறு பயன்பாடுகளையுடையதும், பற்றாக்குறையானதுமான வளங்களைப் பயன்படுத்தி ஒரு சமூதாயம் அதன் நிகழ்கால மற்றும் எதிர்கால நுகர்விற்காக பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்கின்றது. ‘‘பொருளாதாரம்’’ என்பது விருப்பம், முயற்சி மற்றும் மனநிறைவு ஆகியவற்றை மையமாகக் கொண்டதும் மனிதனின் விருப்பங்களின் துவக்க நிலையுமாகும். எனவே, மனித விருப்பங்களோடு தொடர்புடைய அறிவியலே பொருளியலாகும். விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படத்தக்க சாதனங்களோடும் தொடர்புள்ள மனித நடவடிக்கைகள் பற்றி

பயிலுகின்றதே பொருளியலாகும் (Robbinson, 1890). அதேபோல அச்சமூகத்தில் வாழக்கூடிய மக்களும் ஏதோ ஒரு வகையில் பொருளாதாரத்துடன் தொடர்புபட்டுள்ளனர். ஆதலால், ஏதாவது ஒரு பொருளியல் தேவையினை கட்டாயம் அடைந்து கொள்ள உழைக்கும் முயற்சிகள், ஏதாவது கொடுக்கல் வாங்கல்களில் அவனை அறியாமலேயே நுழையச்செய்கின்றன.

எனவே, மனிதனின் வாழ்க்கைக்கு பொருளியலுடன் இணைந்த வாழ்வாதாரம் மிக முக்கியமான ஓர் அம்சமாகக் காணப்படுகின்றது. வாழ்வாதாரம் என்பது பிழைப்பு வாழ்க்கை எனப் பொருள்படும். அதாவது நிம்மதியான வாழ்க்கை முறையினைக் கொண்டு நடாத்தும் பொருட்டு அதற்கான வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்குத் துணைநிற்கும் அத்தனை அம்சங்களும் வாழ்வாதாரமாகக் கொள்ளப்படுகின்றது (www.shabdkosh.com). இங்கு மனிதனின் அன்றாடத் தேவைகளை நுகருதல் வாழ்வாதாரம் எனக் கொள்ளலாம். அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள். மின்சாரம், நீர்வசதி, போக்குவரத்து மற்றும் கல்வி போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதில் உள்ள பிரச்சினைகள் காரணமாகவே இன்று உலகில் பல நாடுகளில் மக்கள் வறுமையில் வாடுகின்றனர். சோமாலியா, எதியோப்பியா, இந்தியா போன்ற நாடுகளில் வாழும் மக்களின் நிலமைகளை இங்கு உதாரணமாகக் கொள்ளலாம் (Rifas et al., 2018; Khanam, 2013).

*மனிதன் அன்றாடக் கொடுக்கல், வாங்கல்களை மேற்கொள்வதற்கும், நிம்மதியான வாழ்க்கையினை வாழ்வதற்கும் வாழ்வாதாரம் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுவதுடன் அதனைப் பெறமுடியாத ஒரு நிலையில் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் சிக்கல்கள் ஏற்படுகின்ற போது ஒருவன் வாழ்வாதாரத்தின் அவசியத்தினை உணர்கின்றான். எனவே, ஒரு மனிதனானவன் தன் வாழ்வை ஆரோக்கியமாக அமைத்துக்கொள்வதில் வாழ்வாதாரம் பாரியளவில் பங்களிப்புச்செய்வதோடு அதன் மூலம் கிடைக்கப்பெறுகின்ற வருமானம் மற்றும் சேமிப்பு என்பனவும் பிரதானமான இடத்தினை வகிக்கின்றன. எனவே, மனிதனானவன் தனக்கான வாழ்வாதார நிலையொன்றினை மேற்கொள்ள முடியாத போது அது அவனுக்கான வருமானம், செலவு, சேமிப்பு போன்ற அனைத்து விடயங்களிலும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. செலவுகள் அதிகரித்து வறுமைக் கோட்டிற்குச் செல்லவேண்டிய நிலையினை தவிர்ந்து கொள்வதற்கு வருமானமும் சேமிப்பும் அவசியமாகின்றன. வருமானம், செலவுகள், அவனுடைய வாழ்க்கை வட்டம் போன்ற மக்களின் அன்றாடத் தேவைகளை பூர்த்திசெய்துகொள்வது தொடர்பானதே வாழ்வாதாரம் தொடர்பான ஆய்வாகும்.*

*இவ்வாய்வானது அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட அட்டாளைச்சேனை-17 பிரிவான "ஆலங்குளம்" எனும் கிராமத்தை ஆய்வுப் பிரதேசமாகக் கொண்டு அங்குள்ள மக்கள் எதிர்கொள்கின்ற வாழ்வாதார நிலைமையினைக் கண்டறியுமுகமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் 488 குடும்பங்களில் 1738 மக்கள் தொகை வாழ்வதோடு 2018 ம் ஆண்டு கணக்கெடுக்கப்பட்ட வாக்காளர் இடாப்பின் படி 722 மக்களே வாக்களிக்கத் தகுதியானவர்களாக காணப்படுகின்றனர் (அட்டாளைச்சேனை பிரதேச செயலகம், 2018). குறிப்பாக வாழ்வாதாரம் தொடர்பாக செல்வாக்குச்செலுத்தும் விடயங்களில் அடிப்படைத் தேவை, கல்வி, பராமரிப்பு, தொழில் முயற்சிகள் இப்படியான பல்வேறுபட்ட விடயங்களை அம்மக்கள் பெற்றுக்கொள்வதில் இடத்துக்கு இடம் மக்கள் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றமையினால் இம்மக்கள் வாழ்வாதாரத்தினைப் பெறுவதில் எவ்வகையான இன்னல்களுக்கு முகம்கொடுக்கின்றனர் என்பது பற்றி ஆய்கின்றது. ஆலங்குளமானது, அட்டாளைச்சேனை பிரதேசத்தில் சுமார் 15 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஒரு கிராமமாக இருப்பதால் இங்கு கல்வி, அன்றாடத் தேவைகள், தொழில் முறைகள் என்பவற்றில் ஏனைய கிராமங்களைப் போன்ற முன்னேற்றம் எவ்வாறு காணப்படுகின்றது என பலதரப்பட்ட நோக்கில் மேற்கொள்ளப்படுகின்றது.*

## 2. ஆய்வுப் பிரச்சினை

*இவ்வாய்வானது ஆய்வுப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுடைய வாழ்க்கைப்பாங்கு, வாழ்வாதாரம் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாகவே நோக்குகின்றது. இங்கு வாழ்பவர்கள் பின்தங்கியவர்களாகவும் நகரப் பிரதேசத்திலிருந்து சுமார் 15 கிலோமிற்றர் தூரத்தில் வாழ்வதால்*

மற்றையவர்களை விட குறிப்பாக ஆலங்குளம் கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் தங்களுடைய அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் என்பவற்றோடு இன்னோரன்ன பல பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வாழக்கூடிய தன்மையும் காணப்படுகின்றது. எனவே, இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில், வருமானம் ஈட்டிக்கொள்ளுவதற்கு இம்மக்கள் கையாளும் வழிமுறைகளும் மற்றும் தொழில் முயற்சிகளும் யாவை?, ஆய்வுப் பிரதேசத்தில் எவ்வாறான வாழ்வாதாரப் பிரச்சினைகளும் சவால்களும் காணப்படுகின்றன? போன்ற வினாக்களுடன் இவ்வாய்வானது ஆயும் அதேவேளை, பின்வரும் நோக்கங்களையும் கொண்டமைந்துள்ளது.

## 3. ஆய்வின் நோக்கங்கள்

- ஆலங்குளம் பிரதேச மக்களின் வருமானம் ஈட்டிக்கொள்ளும் வழிமுறைகளையும் மற்றும் தொழில் முயற்சிகளையும் அடையாளங்காணல்.
- ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகின்ற வாழ்வாதாரப் பிரச்சினைகளையும், சவால்களையும் கண்டறிதல்.

## 4. இலக்கிய மீளாய்வு

விஜயசிங்கம் மற்றும் றிஸ்வான் (2014) ஆகியோர்களால் யுத்தத்திற்கு பின்னர் மீள்குடியேற்றப்பட்டோர் எதிர்நோக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் சம்மந்தமாக யாழ்ப்பாண மாவட்ட வடமராச்சி கிழக்குப் பிரதேசத்தை மையமாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில் இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்று வந்த இன மோதல் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் தங்கள் வாழ்க்கையை இழந்து வீடுகள், கட்டிடங்கள், வாழ்வாதாரச் சொத்துக்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளை இழந்தனர். இவ்யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்கான மீழ்குடியேற்ற நடவடிக்கைகள் நடைபெறுகின்ற போதிலும் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் வாழ்வாதாரத்தினை மீளப்பெற்றுள்ளனரா என்பது தொடர்பில் அறியவேண்டியுள்ளது என இவ்வாய்வாளர்கள் கருதுகின்றனர். எனவே, இவ்வாய்வானது வடமராச்சி கிழக்குப் பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை அறிதலை பிரதான நோக்கமாக கொண்டுள்ளது. இவ்வாய்வுக்கு முதலாம், இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்பு நுட்பமுறைகள் பயன்படுத்தப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாறு சேகரிக்கப்பட்டுள்ள அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

மீள் குடியேற்றப்பட்ட இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு உட்கட்டமைப்பு, இருப்பிட வசதி, தொடர்பாடல், வைத்தியசாலை, வங்கிச்சேவை, போக்குவரத்து போன்ற வசதிகள் நிறைவாகப் பூர்த்திசெய்யப்படாமையினால் மக்களின் வாழ்வாதாரத்தில் எதிர்மறையான விளைவுகளும் பின்னடைவுகளும் ஏற்பட்டுள்ளன என்பது இவ்வாய்விலிருந்து விரிவாகப் பெறப்பட்டுள்ளது. மேலும், மஹ்ஸூம், முனாஸ், ஹிஜாஸ் மற்றும் றிப்கான் (2019) போன்றோர்களாலும் மேற்கொள்ளப்பட்ட அம்பலத்தார் கிராம மக்களின் வாழ்வாதார நிலை தொடர்பான ஆய்விலும் பெரும்பாலும் இம்முடிவே பெறப்பட்டுள்ளன.

சந்திரக்குமார், சாமித்தம்பி (2011) ஆகியோரால் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரையில் ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மாவடிவேம்பு - 02 மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி தொடர்பாக நோக்கப்பட்டுள்ளது. இப்பிரதேச மக்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தங்களது வாழ்வாதார மூலங்களை இழந்த நிலையில் இவ்வாய்வானது அவர்களது வாழ்வாதாரத்தை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம் என்பதை நோக்காகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் தற்போது காணப்படுகின்றதும் எதிர்காலத்தில் கிடைக்கக்கூடியதுமான வளங்களை அடையாளம் காணலும், வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதும், புதிய வாழ்வாதாரத் தொழில்களை அறிமுகப்படுத்தலும் சிறப்பு நோக்கங்களாக அமையப்பெற்றுள்ளன.

இவ்வாய்வுப் பிரதேசத்திலுள்ள சம்புநகர் மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளில் பெற்றோர்கள் அதிகமாக கூலித்தொழிலையே செய்வதனால் அதிகமானோர் குறைந்த

கல்வியறிவு மட்டத்தையும், குறைந்த வருமான மட்டத்தைக் கொண்டவர்களாகவும் உள்ளனர் (Rifas et al., 2018). மேலும், குடும்பத்தின் பருமன், பெற்றோரின் கல்வியறிவு மட்டம், பெற்றோர், அங்கத்தவர்களைப் பிரிதல் அல்லது இழத்தல், பெற்றோர் வேலைக்கு செல்லல் (உள்நாடு, வெளிநாடுகளில்) குடும்பத்தில் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் ஏனைய அங்கத்தவர்கள், குடும்பத்திலுள்ள வளர்ந்தோர், குடும்ப அங்கத்தவர்களுக்கு இடையேயான பரஸ்பர நல்லுறவு, பெற்றோரின் தொழில் நிலை, வீட்டிலுள்ள தொடர்பு சாதனங்கள், பெற்றோரின் கண்டிப்பு, அன்பு, பெற்றோர் பிள்ளைகளுக்கு வீட்டுச் சூழலை ஒழுங்குசெய்து கொடுத்தல் போன்றனவும் வாழ்க்கை நிலை தொடர்பான மிக முக்கியமானவைகளாகும் (செல்வராஜா, 2006). 'இதனால் பெறப்படுகின்ற வருமானமும் அந்த மக்களின் அன்றாடத் தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியாதளவுக்கு மிகவும் குறைவானதாகக் காணப்படுகின்றமையாலும் தங்களின் வாழ்க்கையினை கழிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாலும் இப்பிரதேச மாணவர்கள் தங்களின் படிப்புக்களில் கவனம் செலுத்துவதில்லை' (றிபாஸ், ஜெஸீல் மற்றும் பாத்திமா, 2019).


### 5. ஆய்வு முறையியலும் தரவு சேகரிப்பும்

பண்புசார் மற்றும் அளவுசார் ஆய்வாக அமையப்பெற்றுள்ள இவ்வாய்வானது விபரிப்பு பகுப்பாய்வினைப் பயன்படுத்துகிறது. இவ்வாய்வானது ஒரு கள ஆய்வாதலால் முதலாம் நிலைத்தரவுகளும் இரண்டாம் நிலைத்தரவுகளும் ஆய்வு மூலங்களாக கொள்ளப்பட்டாலும் முதலாம் நிலைத்தரவுகளே பிரதானமாவையாகும். இவ்வாய்வுக்காக குறித்த ஆலங்குளம் கிராமத்திலுள்ள வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்பவர்களாக அடையாளங்காணப்பட்ட மொத்தம் 342 குடும்பங்களில் 75 குடும்பங்கள் எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்டு கிராம சேவை உத்தியோகத்தர், மஸ்ஜித் நிர்வாக பொறுப்பாளர், சமூக சேவை உத்தியோகத்தர் முதலியவர்களிடமிருந்து நேர்காணல் மூலமாகவும் மிகச் சிலரிடம் வினாக்கொத்துக்கள் மூலமாகவும் முதலாம்நிலைத் தரவுகள் திரட்டப்பட்டன. மேலும், இரண்டாம் நிலைத் தரவுகளான நூல்கள், சஞ்சிகைகள், அறிக்கைகள், இணையம் என்பவற்றினூடாக தரவுகள் திரட்டப்பட்டு Microsoft Excel மென்பொருளைப் பயன்படுத்தி விபரணப் பகுப்பாய்வு (Descriptive Analysis) மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

### 6. கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்


தெரிவுசெய்யப்பட்ட 75 நேர்காணல், வினாக்கொத்து மூலமாக தரவுகள் திரட்டப்பட்டன. இவற்றுள் 21-30 வரையான வயதுக்குற்பட்ட 18 நபர்களிடமிருந்தும் 31-45 வரையான வயதுக்குற்பட்ட 24 நபர்களிடமிருந்தும் 46-55 வயதுக்குற்பட்ட 19 நபர்களிடமிருந்தும் 55 வயதிற்கு மேற்பட்டவர்களில் 14 நபர்களிடமிருந்தும் தரவுகள் திரட்டப்பட்டன.

**வரைபு 1 : வயதின் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட தகவல்**





இவற்றுள் ஆரம்பக்கல்வியை மாத்திரம் பெற்றவர்கள் 40 பேரும் இரண்டாம் நிலைக்கல்வியைக் கற்றவர்கள் 32 பேரும் பட்டதாரி மூவரும் உள்ளடங்குவர். மேலும் அக்குடும்பங்களில் தலைமைத்துவமானது 48 குடும்பங்களில் ஆண்களும் 20 குடும்பங்களில் பெண்களும் 07 குடும்பங்களில் பிள்ளைகளும் தலைமைத்துவம் வகிக்கின்றனர்.

**வரைபு 2 : கல்வி அடிப்படையில் சேகரிக்கப்பட்ட தகவல்**




மேலும், ஆய்வுக்குற்படுத்தப்பட்டவர்களுள் 1-5 வருடங்கள் 15 பேரும், 5-10 வருடங்கள் 15 பேரும், 10 ற்கு மேற்பட்ட வருடங்கள் 44 பேரும், மேலும் ஒருவர் 01 வருடமாகவும் இக்கிராமத்தில் வாழ்ந்துவருவதாக எடுக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தெரியவந்தது. இதனடிப்படையில் பெரும்பாலானவர்கள் மிக நீண்ட காலமாக இங்கு வாழ்கின்றார்கள் என்பது புலனாகின்றது. இக்கிராமங்களில் உள்ள பெற்றோர்கள் கூலித்தொழிலை அதிகம் செய்யும் அதேவேளை மிகக் குறைந்தளவானோர் அரச தொழில்களில் உள்நாட்டில் ஈடுபடுவதோடு மிகக் குறைந்தளவிலான பெற்றோர் மத்திய கிழக்கு நாடுகளில் தொழிலுக்காகச் செல்கின்றனர். கூலித்தொழில் எனும் போது கல்லுடைத்தல், மீன்பிடித்தல் விவசாயத்துடன் தொடர்புடைய தொழில்கள் (உதாரணம் வரம்பு கட்டுதல், வேளாண்மை கூலிக்காகச் செய்தல்) போன்ற தொழில்களில் ஈடுபடுபவர்களாகவும் அரசதொழில் எனும் போது சிற்றூழியர்களாகவும் உள்ளனர் (றிபாஸ், ஜெஸீல் மற்றும் பாத்திமா, 2019). இம்மக்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் படி நோக்கும்போது அடிப்படைத்தேவைகள் எந்தளவில் நிறைவேற்றப்படுகின்றது எனும் விடயத்தில் அவர்களுக்காக அன்றாட உணவுத்தேவை, போதியளவான ஆடைகள், இருப்பிட வசதிகள், மின்சார வசதிகள் போன்றவற்றில் அதிகமானோர் திருப்தியின்மை எனும் நிலையில் காணப்படுகின்றனர். அதாவது 36 பேர் திருப்தி என்ற நிலையிலும் 39 பேர் திருப்தியின்மை என்ற நிலையிலும் இருப்பதாக தெரியவருகின்றது.


**வரைபு 3 : அடிப்படைத் தேவைகளின் திருப்தி**




அதுமாத்திரமன்றி, ஆளங்குளப் பிரதேசத்தில் வாழும் மக்களின் இருப்பிடங்கள் பல்வகைப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. அவை வாடகை வீடுகள் குடிசை வீடுகள் மற்றும் சொந்த வீடுகள் என்ற வகைகளாகக் காணப்படுவதுடன் 2008ம் ஆண்டில் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்ட அங்கவீனர்களுக்கான வீடமைப்புத்திட்டத்தினால் வீடுகளைப் பெற்றுக்கொண்டோர் (குறிப்பாக சம்புநகர் கிராமப் பகுதியில்) அச்சொந்த வீடுகளில் குடிகொண்டுள்ளனர் (படம்-2). இன்னும் சிலர் பலகைகள் தகரங்கள் மற்றும் ஓலைகளைக் கொண்டு குடிசை வீடுகளை அமைத்து வாழ்கின்றனர் (படம்-1). இவ்வாறான ஒரு சில குடிசைகளில் சிறார்கள் உட்பட 10 தொடக்கம் 15 பேர் வரை ஒன்றாக வசித்துவருகின்றனர். அந்த வகையில் 17 குடும்பங்கள் வாடகை வீடுகளிலும் 26 குடும்பங்கள் குடிசை வீடுகளிலும்

32 குடும்பங்கள் சொந்த வீடுகளிலும் வசிக்கின்றனர். மேலும், அவர்கள் வசிக்கும் சில வீடுகளின் தோற்றங்களும் இணைக்கப்படுகின்றன.


**வரைபு 4: குடியிருப்புக்களின் வகைகள்**




இதற்கான காரணங்களை அறிந்தபோது அரசாங்கம் மற்றும் தனியார் நிறுவனங்களினால் வழங்கப்படும் உதவித்தொகைகள், மானியங்கள் மற்றும் நன்கொடைகள் என்பன இம்மக்களைச் சென்றடையாமல் புறக்கணிக்கப்படும் நிலை காணப்படுவதனை அறிய முடிந்தது. இதனால் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும்பாலும் திருப்தியற்ற நிலையிலேயே இருக்கின்றனர். மேலும் அம்மக்களுக்கான உதவித்தொகை எனும் விடயத்தில் 12 பேருக்கு சமுர்த்தி இருப்பதாகவும் அரச மானியங்கள் குறிப்பிடப்பட்ட ஒரு சிலருக்கும் நிறுவனங்கள் மூலமாக 02 பேருக்கும் உதவிகள் கிடைப்பதாக தெரியவந்துள்ளது. இந்த விடயத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற சமுர்த்தி மற்றும் மானியங்கள் தொடர்பில் இங்குள்ள மக்கள் புறக்கணிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் ஏனைய முறைகளில் வழங்கப்படக்கூடிய உதவித்தொகைகளின் பங்கீட்டு முறையில் பாரபட்சங்கள் இடம்பெறுவதாகவும் அறியமுடிகின்றது.

அம்மக்களிடையே வாழ்வாதாரங்களைத் தேடிக்கொள்ளும் முறைகளின் அடிப்படையில் தனியார் துறையில் அதாவது நிறுவனங்களில் 04 பேர் தொழில் புரிந்து சுமார் 25000 - 45000 வரை ஊதியம் பெறுகின்றனர். அரசதுறையில் 03 பேர் தொழில் புரிகின்றனர். இவர்கள் 35000 - 60000 வரைக்குமான ஊதியத்தினை மாதமொன்றிற்குப் பெறுகின்றனர். 34 பேர் நாளாந்தக் கூலிவேலை புரிகின்றனர். இவர்களுள் மாதமொன்றிற்கான வருவாய் 10000 -20000 இற்கு இடைப்பட்டதாகும். அதிலும் கூலி வேலைக்கான வாய்ப்புக்கள் கிடைக்கும் போதே இந்நிலை சாத்தியமாகின்றது. இது தவிர சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் 06 பேர் காணப்படுகின்றனர். இவர்களின் வருமானம் 15000 - 20000 இற்கும் இடைப்பட்டதாகும். இது தவிர தொழில் முயற்சிகளில் ஈடுபடாத முதியோர் 03 பேர் உள்ளனர் வருமானம் தேடுவதில் இவ்வாறான சிக்கல்களை எதிர்நோக்குகின்ற இம்மக்களின் தொழில்வாய்ப்பு நிலையானது சிக்கல்கள் நிறைந்தவையாகக் காணப்படுகின்றது.

**வரைபு 5: மக்களின் மாதாந்த வருமான வழிகள்**




.

பெரும்பாலும் இங்குள்ள மக்கள் கல்வியறிவு குறைந்தவர்களாகவே காணப்படுகிறார்கள். அதிகமானோர் ஆரம்பக் கல்வியையும் இரண்டாம் நிலைக் கல்வியையுமே பெற்றுள்ளனர். எனவே, இக்காலகட்டங்களில் அரச தனியார் துறையினர் எதிர்பார்க்கின்ற கல்வித்தகைமைகள் இவர்களிடம் காணப்படாமையினால் இத்துறைகளில் இவர்களிற்கான தொழில் வாய்ப்புக்கள் குறைவாகக் காணப்படுகின்றன. சொந்த தொழில்முயற்சிகளை மேற்கொள்வதாக இருந்தாலும் அதற்கான போதியளவான முதலீடுகள் எதுவும் இல்லாத நிலையில் இங்குள்ள மக்கள் தங்கள் வாழ்வாதாரத் தொழில்களாக கரும்பு வெட்டுதல், மீன் வியாபாரம், வாகன சாரதிகள், பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் போன்ற சிறு தொழில்முயற்சிகளை மேற்கொண்டுவருவதுடன் குறிப்பிட்டுக்கூறக்கூடிய ஒரு சிலரே அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிந்து வருகின்றனர்.

இங்கு நாளொன்றிற்கான செலவுகள் குறித்து கவனத்திற்கொள்ளப்பட்ட போது ஆய்வுக்குற்படுத்திய சுமார் 75 குடும்பங்களில் 18 குடும்பங்கள் நாளொன்றிற்கு 100-500 ரூபாய் வரையிலும் 30 குடும்பங்கள் 500-1000 ரூபாய் வரையிலும் 25 குடும்பங்கள் 1000-1500 ரூபாய் வரையிலும் 1500 ரூபாய்க்கு மேற்பட்ட செலவுகளை 02 குடும்பங்களும் நாளொன்றிற்கு செலவாகக் கொண்டுள்ளன.

**அட்டவணை 1 : மக்களின் மாதாந்த வருமான அளவுகள்**

| குடும்பங்கள் | செலவு |
|---|---|
| *18* | *100-500* |
| *30* | *500-1000* |
| *25* | *1000-1500* |
| *02* | *1500 க்கு மேல்* |

குறித்த பகுதியில் மக்களிற்கான நாளொன்றிற்கான செலவானது அவர்களின் வருவாயோடு ஒப்பிடுகையில் அதிகமாகக் காணப்படுகின்றது. குடும்பங்களில் காணப்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றமை, பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்கள் உறவினர்களைப் பராமரிக்கும் நிலையில் காணப்படுகின்றமை, தொழிலுக்குச் செல்லும் குடும்ப உறவினர்கள் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றமை போன்ற இன்னோரன்ன விடயங்களினால் இங்கு செலவுகளைக் கட்டுப்படுத்தமுடியாதநிலை காணப்படுவதுடன் கடன்பெறும் நிலையும் ஏற்பட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் மேலும் கீழ்நோக்கிச் செல்லும் நிலையே காணப்படுகின்றது. இதனடிப்படையில் நோக்கும் போது இங்குள்ள மக்கள் தாம் பெறும் வருமானங்களை விட உயர்ந்தளவிலான செலவுகளை எதிர்கொள்கின்றனர் என்பதனையும் தங்கள் பொருளாதார நிலையினை உயர்த்திக்கொள்ளும் முயற்சிகளில் ஆர்வங்கொண்டும் காணப்படுகின்றனர், எனினும் அதற்கான வாய்ப்புக்களற்ற நிலையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் இவர்களின் நிலை ஆய்வாளர்களினால் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், அரச தனியார் நிறுவனங்களின் ஊடான பல்வேறுபட்ட உதவிகளையும் இவர்கள் எதிர்பார்க்கும் நிலையில் காணப்படுகின்றனர்.

இவ்வாறே, இம்மக்களிடையே சேமிப்பு முயற்சிகள் என்பதும் அரிதாகவே இடம்பெறுகின்றன. எனினும், மாதாந்த சேமிப்பாக சுமார் 06 பேர் 100 - 500 வரையும் 18 பேர் 800 - 2000 வரையும் 05 பேர் 2000 - 5000 வரையும் 02 பேர் 5000 இற்கு மேற்பட்டதும் 29 பேர் எவ்வித சேமிப்புக்களிலும் ஈடுபடாமலும் காணப்படுகின்றார்கள். இவ்வாறாக குறித்த சில தொகையினர் சேமிப்பு முயற்சிகளினை தங்கள் வருமான நிலைக்கேற்ப மேற்கொண்டு வருகின்றனர். எனினும் பெரும்பாலானோரிடம் இந்நிலை காணப்படவில்லை. ஏனெனில், அவர்கள் தங்கள் அன்றாடத் தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ளமுடியாத நிலையில் சேமிப்பு என்பது இயலாத நிலையில் காணப்படுகின்றது. அவர்களுக்கான போதிய வருமானம் இன்மையும் சேமிப்புத் தொடர்பான விழிப்புணர்வின்மையுமே இதற்குக் காரணங்களெனலாம். இம்மக்களுடைய

வாழ்வாதார சிக்கல்கள் மற்றும் அம்மக்களுடைய தொழில் முயற்சிகள் மூலம் வருவாயினை பெற்றுக்கொள்வதில் காணப்படும் பிரச்சினைகள் அவர்களது தொழில் முயற்சிகளால் கிடைக்கப்பெறும் வருமானம் அவர்களின் அன்றாட செலவினைக்கூட பூர்த்திசெய்யுமளவிற்கு கிடைப்பதில்லை. மேலும், தங்களை வளப்படுத்திக்கொள்ள போதிய வளங்கள் இல்லாதது ஒரு பக்கமாகவும், இருக்கின்ற வளங்களை சரியாக பயன்படுத்தி அவற்றிலிருந்து உச்ச பயனை அடைந்து கொள்வது எப்படி என்ற வழிகாட்டல்கள் எதுவும் இல்லாமல் இருப்பது இன்னொரு பக்கம். தமக்கான தேவைகள் என்ன அதனை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்று சொல்ல, அதற்காக என்ன உதவிகள் வேண்டும் என்பதைக் கூட சரியாக கேட்கத் தெரியாத அளவு பின்தங்கிய ஒரு சூழலிலே இக்கிராம மக்கள் வாழ்ந்து வருகின்றனர். மக்களின் வாழ்க்கைத்தரத்தைக் கட்டமைப்பதில் வாழ்வாதாரம் இன்றியமையாத ஒரு காரணியாகக் காணப்படுகின்றது. இதனைப் பெற்றுக்கொள்வதிலும், நுகர்வதிலும் மக்கள் பல்வேறான சவால்களை எதிர்கொள்கின்றனர். அவர்களிற்கேற்ற வகையிலான தொழில் முயற்சிகள் அங்கு காணப்படாமையும் அவர்கள் பொருளாதார ரீதியில் பின்னடைந்துள்ளமைக்கு பிரதானமான காரணம் எனவும் கண்டறியப்படுகின்றது.

## 7. முடிவுரை

ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் சூழலினையும் தனது வாழ்வாதார அம்சங்களையும் மாத்திரம் கருத்திற்கொண்டவனாக வாழ்கின்ற இன்றைய சூழலில் ஆலங்குள கிராம மக்களது வாழ்வாதார விடயங்களில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் கவனம் செலுத்துவது மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. எனவே, இவ்வாய்வுப் பிரதேசத்தில் வாழும் மக்கள் குறிப்பிட்ட ஒரு சில விடயங்களில் மாத்திரமல்லாமல் அனைத்து விடயங்களிலும் குறிப்பாக அடிப்படை பிரச்சினைகளான இருப்பிடம், போக்குவரத்து, நீர் வசதிகள் மற்றும் தொழில்வாய்ப்புக்கள் போன்ற விடயங்களில் அதிகமான கஷ்டங்களையும், சவால்களையும் சந்தித்தவர்களாகவே வாழ்கின்றார்கள். ஆய்வின் முடிவுகளின்படி மக்களின் தொழில்களை தொடர்ந்து செய்வதில் காணப்படுகின்ற நவீனமுறைகளை கையாள்வதில் உள்ள விழிப்புணர்வுக் குறைபாடு, உட்கட்டமைப்பு குறைபாடு என்பன கண்டறியப்பட்டுள்ளன.

மேலும், இன்றைய நவீன உலகம் பல்வேறுபட்ட வளர்ச்சிப்பாதையினை சந்தித்த போதிலும் மனிதர்களது தேவைகள் இன்னும் பூர்த்திசெய்யப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன. பல படிமுறைகளைக் கொண்ட மனித வாழ்வில் மனிதர்களது வாழ்வியல் முறைகளும் பலதரப்பட்டதாக காணப்படுகின்றது. இந்த வாழ்வியல் முறைகளில் பெரிதும் செல்வாக்குச்செலுத்தக்கூடிய அம்சமாக வாழ்வாதாரமே காணப்படுகின்றது. இதனையடிப்படையாகக் கொண்டு பின்வரும் ஆலோசனைகளும், பரிந்துரைகளும் முன்வைக்கப்படுகின்றன.

- ஆலங்குளம் மக்கள் தங்களது நாளாந்த உழைப்பை அடிப்படையாகக் கொண்டு சுயதொழில்களான தையல், மட்பாண்டக்கைத்தொழில் கால்நடை வளர்ப்பு வீட்டுத்தோட்டம் போன்றவற்றினை செய்வதற்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி செய்தல் வேண்டும்.
- இக்கிராமத்தில் மிகப் பிரதானமான பிரச்சினையாகக் காணப்படுகின்ற நீர்த்தட்டுப்பாட்டினை இல்லாமல் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் கட்டாயம் எடுக்கப்படல் வேண்டும்.
- அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் உதவித்தொகையின் பெறுமதி அதிகரிக்கப்படல் வேண்டும். ஏனெனில் வாழ்க்கைச் செலவு அதிகமாகும்.
- இக்கிராம மக்களில் சுத்தமான குடிநீரை (Water supply) இதுவரை பெறாதவர்களுக்கு அதற்கான நடவடிக்கைகளை அட்டாளச்சேனை பிரதேச செயலகம் ஊடாக அரசாங்கம் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.
- இம்மக்கள் தொழில் செய்வதற்கு ஆர்வமாக இருப்பதனால் அவர்களுக்கு தொழில் முயற்சியான்மை தொடர்பான கருத்தரங்குகள் விழிப்புணர்வுகள் போன்றவற்றை மேற்கொள்ளல் வேண்டும்.

இறுதியாக இந்த ஆய்வுக் கட்டுரையில் வழங்கப்பட்டுள்ள தீர்வுகள் மற்றும் ஆலோசனைகள் கவனத்திற் கொள்ளப்படுமாகவிருந்தால் இக்கிராம மக்களின் வாழ்வாதாரம் எழுச்சியடைந்து தன்னிறைவடைவதோடு இக்கிராமம் (ஆலம்குளம்) போன்ற பல்லாயிரக்கணக்கான குக்கிராமங்களை உள்ளடக்கிய இலங்கையும் விரைவாக அபிவிருத்தி அடையும் என்பதில் ஐயமில்லை.

**உசாத்துணைகள்**

உதயகுமார், எஸ். எஸ்., றெஜினோல்ட், எல். *(2013).* "யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீளக்குடியேறியவர்களின் நிலை பற்றிய ஓர் ஆய்வு" *SEUSL Conferences, FMC Annual Research Conference*, Retrived From: (http://ir.lib.seu.ac.lk/handle/123456789/734, (2014.01.17), Accessed: 2019.08.05.

Vijayasingam, S.N. and Riswan, M. (2014). யுத்தத்திற்கு பின்னர் மீள்குடியேற்றப்பட்டோர் எதிர்நோக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகள்: யாழ்ப்பாண மாவட்ட வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்தை மையப்படுத்திய சமூகவியல் ஆய்வு. Faculty of Arts and Culture and Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka: URL: http://ir.lib.seu.ac.lk/bitstream/handle/123456789/2454/COLLOQUIUM%202014%20ABSTRACTS-50.pdf?sequence=1

சந்திரகுமார், சாமித்தம்பி, *(2011).* "ஏறாவூர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மாவடிவேம்பு -02 மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி தொடர்பான ஆய்வு", *SEUSL International Symposium*, Retrived From: (http://ir.lib.seu.ac.lk/hadle/123456789/1014, Accessed: 2019.08.05.

பிரதேச செயலக அறிக்கை *(2018)*, *அட்டாளைச்சேனை பிரதேச செயலகம்*, அட்டாளைச்சேனை.

றிபாஸ், ஏ.எச்., ஜெஸீல், எம். ஐ.எம் மற்றும் பாத்திமா, எம்.எம்.எஸ் *(2019). பாட வீட்டுப்பணிகளைப் பூர்த்திசெய்வதில் வறுமையான வீட்டுச் சூழலின் தாக்கம்: அதிகஷ்டப் பிரதேச முஸ்லிம் பாடசாலைகளை மையப்படுத்திய ஓர் ஆய்வு*, களம்-சர்வதேச ஆய்விதழ்- கலை கலாசார பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் 12(1), 60-73.

றிபாஸ், ஏ.எச்., ஆறா, எம். என்.என், ஆயிஸா, எஸ்.எப்., றயிஸ்தீன், ஆர். மற்றும் மிஸ்பா, என் .எம் *(2018). வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்: சம்புநகர் கிராமத்தை மையப்படுத்திய கள ஆய்வு*, ஐந்தாவது சர்வதேச ஆய்வரங்கு, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், URL: http://ir.lib.seu.ac.lk/handle/123456789/3436

மணிக்குமார் கா.சு. *(2006). 1930 களில் தமிழகம், பொருளாதார பெருமந்தம் - ஓர் ஆய்வு.* சென்னை: அலைகள் வெளியீட்டகம்.

பழீல் ஹக், கே.எம். *(2009). இஸ்லாமியப் பொருளியல்*, சமூக விஞ்ஞானத்துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில், வெளியீட்டகம்.

முஸ்தபா, ஏ.எம்.எம். *(2019).* ஆங்கிலேயர் ஆட்சியில் இந்திய சிறுகைத்தொழில்களின் நிலை, *களம்-சர்வதேச ஆய்விதழ்- கலை கலாசார பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்* 12(1), 17-25.

Mahsoom, A.R.M., Munas, M.H.A., Hijas, A.M.M. and Rifkan, K.D.M. (2019). *Social and Livelihood Condition of the People of Village Ambalathar,* Proceeding of 9th International Symposium, South

Eastern University of Sri Lanka, 27th and 28th of November 2019, ISBN 978-955-627-189-8, http://ir.lib.seu.ac.lk/bitstream/handle/123456789/4056/Final%20Proceedings

Arif, G. M. (2001). *A Study on Socio-Economic Conditions in Islamabath*, Volume-4, pp. 348-456.

Abhiman, D. (1999). *A Survey study on Socio-economic Condition in India, Reserve Bank India*, Volume-28, pp. 313-345.

Thayalini, K., Jeyapiratheeba, A. (2014). *சமூக பொருளாதார நிலை பற்றிய ஆய்வு: திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரவினை மையப்படுத்தியது.*

Azra, K., (2013). *Muslim Backward Classes: A Sociological Perspective*, India: SAGE Publication Pvt Ltd, New Delhi, 79-82.

ஸபீர், என்., *(2019). வாழ்வாதாரம் தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகள்,* நேர்காணல், *17.08.2019*, ஆலங்குளம், அட்டாளைச்சேனை.

நஜீமா உம்மா, ஏ. எல்., *(2019). வாழ்வாதாரம் தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகள்,* நேர்காணல், *17.08.2019*, ஆலங்குளம், அட்டாளைச்சேனை.

அஸ்வர், எஸ். எம்., *(2019). போக்குவரத்து, குடிநீர் தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகள்,* நேர்காணல், *21.08.2019*, சம்பூநகர்.

ஹிஸாம், எம்.ஆர்.எம்., *(2019), வாழ்வாதாரம் தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகள்,* நேர்காணல், *17.08.2019*, ஆலங்குளம், அட்டாளைச்சேனை.